TAMIL

CHILD DEVELOPMENT - PAPER –III SET-1 – PART - I

1. These are necessary for a person to excel in any work or in any profession

   1. Interest and Attitude
   2. Aptitude and Interest
   3. Attitude and Creativity
   4. Learning and Maturity

   ஒரு நபர் மேம்பாடடைய எவ்வித வேலை எனினும் அல்லது தொழில் எனினும் தேவையானவை

   1. ஆர்வம் மற்றும் மனப்பான்மை
   2. நாட்டம் மற்றும் ஆர்வம்
   3. மனப்பான்மை மற்றும் ஆக்கத்திறன்
   4. கற்றல் மற்றும் முதிர்ச்சி

2. The memory used by a 4 year old child in reciting English Rhymes

   1. Rote Memory
   2. Sensory Memory
   3. Logical Memory
   4. Active Memory

   நான்கு வயது குழந்தை ஆங்கிலப் பாடல்களை (Rhymes) சொல்லும்போது பயன்படுத்தும் நினைவு

   1. நெட்டுரு நினைவு
   2. புலனுறுப்பு நினைவு
   3. தற்கரீதியான நினைவு
   4. செயல்படும் நினைவு

3. Hypothetico – deductive reasoning is formed in this cognitive stage of piaget

   1. Pre-operational stage
   2. Formal operational stage
   3. Sensory motor stage
   4. Concrete operational stage

   கருதுகோள் – விதிவிளக்கு ஆய்வு உருவாகுதல் என்பது பியாஜேயின் அறிவு சார்ந்த இந்த நிலை

   1. செயலுக்கு முற்பட்ட நிலை
   2. முறைசார்ந்த செயல் நிலை
   3. புலன் இயக்க செயல் நிலை
   4. காட்சிநிலை செயல் நிலை

4. The chief aim of Inclusive Education is to satisfy different type of needs of children of this category

   1. Needs of all the learners
   2. Needs of children with special needs
   3. Needs of children with learning disability
   4. Needs of normal learners

   உட்பட்ட (இணைந்த) கல்வியின் தலையாய குறிக்கோள் இவ்வகையான குழந்தைகளின் வெவ்வேறு வகை தேவைகளை நிறைவு செய்தலாகும்.

   1. அனைத்து கற்பவர்களின் தேவைகள்
   2. மாற்றுத் திறனாளிகளின் தேவைகள்
   3. கற்றல் குறைபாடுள்ள பிள்ளைகளின் தேவைகள்
   4. சாதாரண கற்பவர்களின் தேவைகள்

5. The age of children who are facing the psycho social critical situation i.e., known as “Initiative vs Guilt” is

1. Birth to $1\frac{1}{2}$ year
2. $1\frac{1}{2}$ to 3 years
3. 6 to 12 years
4. 3 to 6 years

‘தொடக்கம் – குற்றம்’ எனும் மன சமூக சிக்கல் நிலையை எதிர்கொள்ளும் குழந்தைகளின் வயது

1. பிறப்பு முதல் $1\frac{1}{2}$ வருடங்கள் வரை
2. $1\frac{1}{2}$ வருடங்கள் முதல் 3 வருடங்கள் வரை
3. 6 வருடங்கள் முதல் 12 வருடங்கள் வரை
4. 3 வருடங்கள் முதல் 6 வருடங்கள் வரை

6. The learning principle involved in learning ‘type writing’ is

1. Law of Exercise
2. Law of effect
3. Law of Extinction
4. Law of Readiness

‘தட்டச்சு’ கற்றுக்கொள்ளுதலில் அடங்கியுள்ள கற்றல் கோட்பாடு

1. பயிற்சி விதி
2. விளைவு விதி
3. அற்றுப்போதல் விதி
4. ஆயத்த விதி

7. The administrative purpose of Evaluation is

1. Accountability
2. Curriculum Construction
3. Utility to Society
4. To improve Teaching

மதிப்பீட்டின் நிர்வாக தொடர்பான நோக்கம்

1. உத்தரவாதம்
2. கலைத்திட்ட வடிவமைப்பு
3. சமூகத்தின் பயன்பாடு
4. கற்பித்தலை மேம்படுத்துதல்

8. The student who failed in the examinations advocates himself as there is no use in passing examinations – This is known is

1. Projection
2. Rationalization
3. Compensation
4. Displacement

தேர்வில் தோல்வியடைந்த மாணவன் தான் தேர்ச்சி பெற்றாலும் பயன் ஏதுமில்லை என தன்னைத்தான் தேற்றிக்கொள்வது

1. புறத்தெறித்தல்
2. காரணம் கற்பித்தல்
3. ஈடு செய்தல்
4. இடமாற்றம்

9. The counseling which makes a person to find out solution for his problem by himself is

1. Directive Counselling
2. Non-directive Counselling
3. Eclectic Counselling
4. Special Counselling

ஒரு நபர் தன் பிரச்சினைக்கு தானே தீர்வு காணுமாறு செய்யும் அறிவுரை பகர்தல்

1. நேர்முக அறிவுரை பகர்தல்
2. மறைமுக அறிவுரை பகர்தல்
3. மாற்றுமுறை அறிவுரை பகர்தல்
4. சிறப்பு அறிவுரை பகர்தல்

10. In order to get recognition in his village by speaking in English a student learnt English and got recognition – The need that is satisfied here is,

1. Primary need
2. Physical need
3. Secondary need
4. Economic need

ஒரு மாணவன் தான் ஆங்கிலம் பேசுவதால் தன் கிராமத்தில் அடையாளம் கிடைக்கும் என ஆங்கிலத்தை கற்று அடையாளம் பெறுகிறார். இங்கு நிறைவேற்றப்பட்ட தேவை என்பது

1. முதன்மை தேவை
2. உடல் ரீதியான தேவை
3. இரண்டாம் தேவை
4. பொருளாதாரத் தேவை

11. The method which is appropriate to know the fear and anxiety experienced by a person who lost his way in a new place

1. Observation Method
2. Case Study Method
3. Experimental Method
4. Introspection Method

புதிய இடத்தில் வழி தவறிய ஒரு நபர் எதிர்கொண்ட மனப்பதற்றம் மற்றும் அச்சம் பற்றி தெரிந்துக்கொள்ள சரியான முறை

1. உற்று நோக்கல் முறை
2. தனியாள் ஆய்வு முறை
3. பரிசோதனை முறை
4. அகநோக்கு முறை

12. The transfer of learning where a boy who knows cycling tries to learn motor bike riding is,

1. Negative Transfer
2. Positive Transfer
3. Zero Transfer
4. Bilateral Transfer

மிதிவண்டியை ஓட்ட கற்றுக்கொண்ட ஒரு மாணவன் மோட்டார் வண்டியை ஓட்ட கற்றுக்கொள்ளும்போது நடைபெறும் கற்றல் இடமாற்றம்

1. எதிர்மறை இடமாற்றம்
2. நேர்மறை இடமாற்றம்
3. பூஜ்ஜிய இடமாற்றம்
4. இருவகை இடமாற்றம்

13. Wrong statement with regard to interests

1. Interests doesn't come by birth
2. Interests are formed through learning and experience
3. Interests are same in all children
4. Interest development depends on aptitudes, intelligence and opportunities of the children

ஆர்வத்திற்கு தொடர்பான தவறான கூற்று

1. ஆர்வங்கள் பிறப்போடு வருவதில்லை
2. ஆர்வங்கள் கற்றல், அனுபவங்கள் மூலமாக உருவாகின்றன
3. ஆர்வங்கள் அனைத்து குழைந்தைகளுக்கும் ஒரே மாதிரியாக இருக்கும்
4. ஆர்வங்கள் மேம்பாடு அடைதல் என்பது குழந்தைகளின் திறமைகள், நுண்ணறிவு மற்றும் வாய்ப்புகளைப் பொறுத்து அமையும்

14. A boy who studied Hindi up to 10th class has written Hindi words instead of Sanskrit words in his Inter Sanskrit Exam – This is due to

1. Repression
2. Retroactive inhibition
3. Passive decay through disease
4. Pro active inhibition

பத்தாம் வகுப்பு வரை இந்தி கற்ற மாணவன் பதினோராம் வகுப்பில் சமஸ்கிருத தேர்வில் சமஸ்கிருத சொற்களுக்கு பதிலாக இந்தி சொற்களை எழுதிகிறார். இதற்கு காரணம்

1. நசுக்குதல்
2. பின்செயல் தடைநிலை
3. பயன்பாடின்றி செயலற்ற சிதைவு
4. முன்செயல் தடைநிலை

15. The main objective in the preparation of a year plan

1. To complete the syllabus on time
2. Preparation of Teaching Learning Material according to the lessons
3. Using Teaching Learning Material according to the lessons
4. To decide what to teach in a period

வருடாந்திர திட்டம் தயாரித்தலின் முதன்மை குறிக்கோள்

1. சரியான நேரத்திற்கு பாடங்களை முடித்தல்
2. பாடங்கள் வாரியாக கற்றல்-கற்பித்தல் கருவிகளை தயாரித்தல்
3. பாடங்களுக்கு ஏற்ப கற்றல்-கற்பித்தல் கருவிகளை பயன்படுத்துதல்
4. ஒரு பிரிவேளையில் எவை கற்பிக்க வேண்டும் என முடிவு செய்தல்

16. The factor which acts as both pre-natal and post-natal environmental factor on the personality of person

1. Neighbours
2. Attitude of parents
3. Home environment
4. Media

ஒரு நபரின் ஆளுமையின் மேல், பிறப்பிற்கு முன்பும் மற்றும் பிறப்பிற்கு பின்பும் சுற்றுப்புற காரணியாக வேலை செய்வது

1. அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள்
2. பெற்றோரின் மனப்பான்மை
3. வீட்டு சூழ்நிலை
4. ஊடகங்கள்

17. The parents of a girl appreciated her when they saw her helping poor with this reinforcement, she was habituated to help poor. Here the type of learning is,

1. Classical conditioning
2. Observational learning
3. Insightful learning
4. Operant conditioning

ஒரு பெண் ஏழை எளியவர்களுக்கு உதவி செய்தலைப் பார்த்த அவளின் பெற்றோர் அப்பெண்ணை பாராட்டுகின்றனர். இந்த வலுவூட்டுதல் வழியே ஏழை எளியவர்களுக்கு உதவி செய்தல் என்பது ஒரு பழக்கமாக மாற்றம் அடைகிறது. இங்கு கற்றலின் வகை

1. ஆக்கநிலையிறுத்தல்
2. உற்றுநோக்கல் கற்றல்
3. உட்காட்சி கற்றல்
4. தன்னிச்சையான ஆக்கநிலையிறுத்தல்

18. The French Psychologist who was called as ‘Father of Intelligent tests’

1. William Stern
2. C. M. Bhatia
3. Alfred Binet
4. L.M. Terman

‘நுண்ணறிவு சோதனைகளின் தந்தை’ என அழைக்கப்படும் பிரஞ்சு உளவியல் வல்லுனர்

1. வில்லியம் ஸ்டெர்ன் (William Stern)
2. சி.எம்.பாடியா (C. M. Bhatia)
3. ஆல்பர்ட் பினே (Alfred Binet)
4. எல்.எம்.டர்மன் (L.M. Terman)

19. Mc Iver's saying that "The reason for my today's position is due to my yesterdays thinking about what should I be tomorrow" is the best example for

1. Internal Motivation
2. Achievement Motivation
3. External Motivation
4. Ability Motivation

மெக் ஐவர் (Mc Iver's) கூறியது போல் 'இன்று நான் இந்த நிலையில் இருக்க காரணம் நாளை நான் என் நிலையில் இருக்க வேண்டும் என நேற்றே நான் சிந்தித்து முடிவு செய்யததே' இது இதற்கு சிறந்த உதாரணம்

1. அக ஆயத்தம்
2. அடைவு ஆயத்தம்
3. புற ஆயத்தம்
4. ஆற்றல் ஆயத்தம்

20. The development which occurs only due to time and age but not due to the effect of training and environment is,

1. Language Development
2. Moral Development
3. Maturity
4. Adjustment

பயிற்சி, சுற்றுப்புறத்தின் விளைவுகளின்றி காலம் மற்றும் வயதின் மூலமாக அடையும் மேம்பாடு

1. மொழி மேம்பாடு
2. நீதிநெறி மேம்பாடு
3. முதிர்ச்சி
4. ஒத்துப்போதல்

21. Collaborative and Cooperative learnings are

1. Child centered
2. Teacher centered
3. Subject centered
4. Competency centered

ஒன்று சேர்ந்து வேலை செயதல் மற்றும் ஒத்துழைத்து கற்றல் என்பன

1. குழந்தை மையமானது
2. ஆசிரியர் மையமானது
3. பாடத்திட்ட மையமானது
4. திறன் மையமானது

22. The correct order of learning steps in observational learning is

1. Reinforcement, Attention, Retention, Regeneration
2. Retention, Attention, Regeneration, Reinforcement
3. Attention, Regeneration, Retention, Reinforcement
4. Attention, Retention, Regeneration, Reinforcement

உற்றுநோக்கி கற்றலில் உள்ள கற்றல் படிகளின் சரியான வரிசை

1. வலுவூட்டுதல் – கவனம் – மனத்திருத்தம் – மீண்டும் உருவாக்குதல்
2. மனத்திருத்தம் – கவனம் – மீண்டும் உருவாக்குதல் – வலுவூட்டுதல்
3. கவனம் – மீண்டும் உருவாக்குதல் – மனத்திருத்தம் – வலுவூட்டுதல்
4. கவனம் – மனத்திருத்தம் – மீண்டும் உருவாக்குதல் – வலுவூட்டுதல்

23. The wrong statement with respect to RTE Act - 2009

1. Child should be admitted to the age appropriate class
2. Do not abuse children physically and mentally
3. If students are unable to attain the required minimum levels of a particular class they should continue in the same class
4. Teaching should be done only in the mother tongue of the child

RTE சட்டம்-2009-ன்படி தவறான கூற்று

1. குழந்தைகளின் வயதிற்கு ஏற்றார்போல் தகுந்த வகுப்பில் சேர்த்துக்கொள்ளுதல்
2. குழந்தைகளை உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் துன்புறுத்த கூடாது
3. குழந்தைகள் ஒரு வகுப்பிற்காக நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச திறன்களை பெறவில்லை எனில் மீண்டும் அதே வகுப்பில் தொடர வேண்டும்
4. குழந்தைகளின் தாய்மொழிலேயே கற்பித்தல் நடைபெற வேண்டும்

24. The stage which is called as “Pre gang stage” in child development

1. Early Adolescence
2. Early childhood
3. Late childhood
4. Late Adolescence

‘முன் குழு(கூட்டம்) நிலை’ என அழைக்கப்படும் குழந்தைகளின் வளர்ச்சிநிலை

1. முன் குமரப் பருவம்
2. முன் பிள்ளைப் பருவம்
3. பின் பிள்ளைப் பருவம்
4. பின் குமரப் பருவம்

25. One of the following does not affect the child’s learning in the school

1. Punctuality of the teacher
2. Syllabus
3. Social standard of co learners
4. Attitude of the teacher towards students

கீழ்க்கண்டவற்றில் ஒன்று பள்ளியில் மாணவரின் கற்றலை பாதிப்பது இல்லை

1. ஆசிரியரின் காலந்தவறாமை
2. பாடத்திட்டம்
3. சகமாணவரின் சமூகநிலை
4. மாணவரிடத்தில் ஆசிரியரின் மனப்பான்மை

26. The characteristic feature of the child who is in the 2nd stage of pre conventional level

1. Behaves with an objective of getting rewards
2. Make efforts to avoid punishments from the elders
3. Gives prominence to the acceptance of others
4. Follow the rules of the society to avoid blame from the society

முன் பாரம்பரிய நிலையின் இரண்டாவது நிலையில் உள்ள குழந்தைகளின் பண்பு

1. பரிசுகளைப் பெற வேண்டும் என்ற குறிக்கோளுடன் செயல்படுதல்
2. பெரியவர்களிடமிருந்து தண்டனைகளை தவிர்த்துக்கொள்ள முயற்சிப்பர்
3. மற்றவர்களின் சம்மதத்திற்காக அதிக முக்கியத்துவம் தருவர்
4. சமுதாயத்தின் குற்றச்சாட்டிலிருந்து தவிர்த்துக்கொள்ள சமுதாய விதிகளை கடைபிடிப்பர்

27. Identify the odd one from the following

1. Relearning
2. Repression
3. Recall
4. Recognition

கீழ்க்கண்டவற்றில் வேறுபட்ட (வித்தியாசமான) ஒன்றை தேர்ந்தெடு

1. மீண்டும் கற்றல்
2. நசுக்குதல்
3. மீட்டுக்கொணர்தல்
4. மீட்டுணர்தல்

28. The type of school organization which gives importance to the opinions of the teachers and students in preparing and organizing school programes is

1. Democratic - Encouraging
2. Undemocratic - Discouraging
3. Undemocratic - Encouraging
4. Arbitrary - Punishing

பள்ளிக்கூடங்களில் நிர்வகிக்கப்படும் நிகழ்ச்சிகளை ஒழுங்கமைத்தல் மற்றும் நிர்வகித்தலில் ஆசிரியர்கள், மாணவர்களின் ஆலோசனைகளை மதிக்கும் பள்ளி நிர்வாகம்

1. ஜனநாயகம் – ஊக்குவித்தல்
2. ஜனநாயகமற்ற – ஊக்குவித்தலற்ற
3. ஜனநாயகமற்ற – ஊக்குவித்தல்
4. தன்னிச்சையான – தண்டனைக்குறிய

29. The theory which states that the intuitive thinking and investigative learning of children help them to construct their knowledge is,

1. Bandura's observational learning
2. Trial and Error learning
3. Insightful learning
4. Bruner's learning theory

மாணவர்களில் அகவுணர்வு சிந்தனை, ஆராய்ந்து கற்றல் என்பது மாணவரின் அறிவு உருவாக்கத்திற்கு உதவும் என தெரிவித்த கொள்கை

1. பந்துராவின் உற்றுநோக்கி கற்றல்
2. முயன்றி தவறி கற்றல்
3. உட்காட்சி கற்றல்
4. புரூணர் கற்றல் கொள்கை

30. One of the following improves memory

1. Testimony
2. Memory span
3. Association of ideas
4. Narratives

கீழ்க்கண்டவற்றில் ஒன்று நினைவாற்றலை அதிகரிக்கிறது

1. எண்பிக்கும் செயல்
2. நினைவு விரிவு
3. கருத்துகளின் தொகுப்பு
4. கதை விவரணம்

## TAMIL- PAPER-III - SET-1

## PART-II

கீழ்க்காணும் பாடலைப் படித்து, 31, 32 வினாக்களுக்கு விடையளி

கற்பு நிலைஎன்று சொல்லவந்தார் இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்
வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும்
வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம்

31. மேற்காணும் பாடலுக்கு பொருத்தமான தலைப்பு

1. பெண்ணின் பெருமை
2. பெண் விடுதலை
3. ஆணின் பெருமை
4. ஆண் விடுதலை

32. 'இருகட்சி' என்று பாடல் குறிப்பிடுவது

1. தி.மு.க., அ.தி.மு.க.
2. பெண், குழந்தை
3. குழந்தைத் திருமணம், கைம்மை
4. ஆண், பெண்

கீழ்க்காணும் பத்தியைப் படித்து, 33, 34 வினாக்களுக்கு விடையளி

தன் எண்ணங்களை வெளிப்படுத்த மனிதன் பேச்சு உணர்ச்சிகளைப் பாட்டின் மூலம் தெரிவித்துக்கொண்டான்; என்று மொழி நூலறிஞர் ஜெஸ்பர்ஸன் குறிப்பிடுகின்றார். இதனால் ஒரு மொழியில் செய்யுளே உரைநடைக்கு முன் வழங்கியிருக்க வேண்டுமென்பது வெளிப்படை.

33. முதலில் மனிதன் தன் எண்ணங்களை வெளிப்படுத்த பேச்சு மொழியை இவ்வாறு பயன்படுத்தினான்.

1. பாட்டு
2. கவிதை
3. உரைநடை
4. நாடகம்

34. தமிழ் மொழி வளர்ச்சியில் உரைநடைக்கு முன் தோன்றிய இலக்கியம்

1. உரைநடை
2. நாடகம்
3. செய்யுள்
4. நடிப்பு

35. ஓடக் காண்பது பூம்புனல் வெள்ளம்

ஒடுங்கக் காண்பது யோகியர் உள்ளம்

வாடக் காண்பது மின்னார் மருங்கு

வருந்தக் காண்பது சூல்உளைச் சங்கு

– என்று மலையின் வளத்தைப் பாடியவர்

1. திரிகூடராசப்ப கவிராயர்
2. அந்தகக்கவி வீரராகவர்
3. குமரகுருபரர்
4. செயங்கொண்டார்

36. தமிழகத்தின் சிறப்பை உணர்த்துவதில் தொண்டை நாடு இதற்குச் சிறப்புடையது.

1. வேழமுடைத்து
2. சோறுடைத்து
3. முத்துடைத்து
4. சான்றோர் உடைத்து

37. 'வலவன் ஏவா வானவூர்தி' என்று இந்நூல் குறிப்பிடுகிறது

1. நற்றிணை
2. அகநானூறு
3. புறநானூறு
4. குறுந்தொகை

38. வெள்ளிப்பிடி அருவா

ஏ! விடலைப் பிள்ளை கை அருவா

சொல்லியடிச்சருவா இப்போ

சுழட்டுதடி நெல்கருத...

– என்று கதிர் அறுக்கப் போகும் பெண்கள் பாடும் நாட்டுப்புறப் பாடல் இவ்வகையைச் சார்ந்தது

1. தாலாட்டுப் பாடல்
2. தொழில் பாடல்
3. கொண்டாட்டப் பாடல்
4. விளையாட்டுப் பாடல்

39. இறைவன் தருமிக்கு அருளியப் பாடல்

1. யாயும் ஞாயும் யாரோகியரோ
2. நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
3. இம்மை மாறி மறுமை யாயினும்
4. கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி

40. 'முந்நீர் வழக்கம் மகடூஉவோ டில்லை' – என்பது இப்பயணத்தை குறிக்கிறது

1. வான்வழிப் பயணம்
2. தரைவழிப் பயணம்
3. கடற் பயணம்
4. நடை பயணம்

41. ‘பேனா’ எனும் பிறமொழிச் சொல்லிற்கேற்ற தமிழ்சொல்

1. எழுத்தாணி
2. தூவல்
3. கருங்கோட்டு
4. தேய்ப்பம்

42. ‘பஞ்சாய்ப் பறத்தல்’ - எனும் இம்மரபுத் தொடருக்குப் பொருள்

1. அலைந்து திரிதல்
2. பொய்யழுகை
3. மிகுதியாகப் பேசுதல்
4. பயனின்றி இருத்தல்

43. நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின் நீங்கின் அதனைப் பிற. - இப்பாடலில் இடம்பெற்றுள்ள அணி

1. வேற்றுமை அணி
2. உவமை அணி
3. பிறிது மொழிதலணி
4. தற்குறிப்பேற்ற அணி

44. வெண்பாவின் ஈற்றுச்சீர் ‘நேர்பு’வில் முடிந்திருந்தால் அதன் வாய்ப்பாடு

1. பிறப்பு
2. காசு
3. நாள்
4. மலர்

45. ‘இளமையில் கல்’ – என்பது இவ்வகைத் தொடராகும்

1. கட்டளைத் தொடர்

2. உணர்ச்சித் தொடர்

3. உடன்பாட்டுத் தொடர்

4. எதிர்மறைத் தொடர்

46. ‘நகர்ப்புறம்’ எனும் சொல்லை புறநகர் என்று கூறுவது

1. மரூஉ

2. குழூஉக் குறி

3. மங்கலம்

4. இலக்கணப் போலி

47. ‘மந்தி’ என்பதன் பொருள்

1. ஆண் குரங்கு

2. பெண் குரங்கு

3. தேவர்

4. சித்தர்

48. கீழ்க்காணுபவற்றுள் ‘கிளி’ எனும் பொருள் தாரத சொல்

1. சுகம்

2. தத்தம்

3. கிள்ளை

4. மஞ்ஞை

49. ‘பகடு’ என்பதன் இருபொருள்

1. யானை, எருது
2. யானை, குதிரை
3. யானை, கரடி
4. யானை, மான்

50. ‘நானிலம்’ இத்தொகைச் சொல்லை விரித்துக்காண்

1. மனம், புத்தி, சித்தம், அகங்காரம்
2. அறம், பொருள், இன்பம், வீடு
3. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்
4. வைதருப்பம், கௌடம், பாஞ்சாலம், மாகதம்

51. இராமனது மனைவி சீதை. - இத்தொடரில் அமைந்துள்ள வேற்றுமை

1. நான்காம் வேற்றுமை
2. ஐந்தாம் வேற்றுமை
3. ஆறாம் வேற்றுமை
4. இரண்டாம் வேற்றுமை

52. ‘மாடுகள்’ என்பது

1. ஒன்றன் பால்
2. பலர் பால்
3. ஆண் பால்
4. பலவின் பால்

53. பாண்டியன் கடிதம் எழுதினான். – இத்தொடரைச் செயப்பாட்டு வினைத் தொடராக்குக

1. கடிதம் பாண்டியன் எழுதினான்
2. கடிதம் பாண்டியனால் எழுதப்பட்டது
3. பாண்டியன் கடிதத்தை எழுதினான்
4. பாண்டியன் எழுதினான் கடிதம்

54. ‘கருங்குயில்’ என்பது இவ்விதிகளின்படி புணரும்

1. ஈறுபோதல், இனமிகல்
2. ஆதிநீடல், இனமிகல்
3. தன்னொற்றிரட்டல், இடையுகரம் இ ஆதல்
4. முன்னின்ற மெய்திரிதல், ஆதிநீடல்

55. கற்பித்துக் கொண்டிருக்கும்போது மாணவர்களிடம் கற்றல் நிகழ்வதை அறியதக்க தேர்வு

1. நிலையறித் தேர்வு
2. பருவத் தேர்வு
3. வளர்வறித் தேர்வு
4. ஆண்டுத் தேர்வு

56. சமூகவியல் மன்றத்திற்கு இப்பெயர் பொருந்தும்

1. இராமானுஜம் மன்றம்
2. பெரியார் மன்றம்
3. திருவள்ளுவர் மன்றம்
4. சர்.சி.வி. இராமன் மன்றம்

57. வாய்விட்டுப் படித்தலில் உள்ள குறைபாடு

1. காலமும் முயற்சியும் மிகவும் செலவாகிறது
2. செய்யுளை ஏற்ற இசையுடன் ஒப்புவிக்க முடியும்
3. விளம்பரச் செய்திகளை அறிவிக்க உதவுகிறது
4. தடுமாற்றமின்றி விரைந்து படித்தலை அறிந்தறியலாம்

58. இயற்கையை ஒட்டி கல்வி அமைய வேண்டும் என்று கூறியவர்

1. மாண்டிச்சோரி
2. கில்பாட்ரிக்
3. ஜான்டூயி
4. பிரோபெல்

59. அன்பு, கல்வி, சமூகப் பொருள், நாட்டுப்பற்று, அரசியல் பொருள் போன்றவற்றின் பண்புகள் பற்றிய உண்மைகளை விளக்கும் கட்டுரை

1. கற்பனைக் கட்டுரை
2. சிந்தனைக் கட்டுரை
3. கதைக் கட்டுரை
4. வருணனைக் கட்டுரை

60. பல்வகுப்பு கற்பிக்கும் சூழலில் ஆசிரியர்களுக்குப் பெருமளவில் உதவுபவர்

1. பொதுநிலை மாணவர்கள்
2. பின்தங்கிய மாணவர்கள்
3. மீத்திற மாணவர்கள்
4. மன வளர்ச்சியற்ற மாணவர்கள்

# Day- Session- 2- SET –N for Minor media

**English – Paper- III – Set – 1**

61. A person who can do anything for money is called;

    1. misogynist
    2. fatalist
    3. teetotaler
    4. mercenary

62. In a developed country, the development is balanced.

    The above underlined words are;

    1. an adjective and a noun
    2. a verb and an adjective
    3. an adverb and a noun
    4. a noun and an adjective

63. My house stands ………… all the other houses in the street as it is big in size.

    Choose the correct compound prepositional phrase that fits the context.

    1. in front of
    2. apart from
    3. in addition to
    4. in accordance with

64. He <u>had completed</u> his project work, before he <u>went</u> to play.

The tenses of the underlined words are;

1. simple past and simple present
2. past continuous and simple present
3. past perfect and simple past
4. past continuous and simple present

65. He was particular about his handsomeness …… he was unmarried.

The correct linker in the sentence is;

1. because
2. but
3. which
4. or

66. If you want to know the meaning of the word, you could refer …… a dictionary.

The correct preposition in the context is;

1. in
2. on
3. to
4. of

67. I went to the air-port to <u>say good bye</u> to my sister,
Choose the correct phrasal verb that means the underlined words.

1. drop off
2. see off
3. set on
4. dash off

68. My brother plays ……. guitar well.
The correct article in the blank is:

1. the
2. an
3. a
4. no article is needed

69. He is preparing ………. for his exams.
The correct form of the word in the context is;

1. serious
2. seriousness
3. seriouses
4. seriously

70. The Chief Minister might visit the village today.
The underlined modal auxiliary stands for;

1. compulsion
2. possibility
3. obligation
4. order

71. He does not like coffee.
He does not like tea.

The above sentences can be combined by using;

1. so
2. but
3. either - or
4. neither … nor

72. Soon after the examinations …. over, Mom …. Preparations for the trip.

The correct verbs that suits in the above sentence are;

1. are, making
2. is, make
3. were, made
4. is, makes

73. Read the following sentences carefully.

a. She was able to convey a wide range of feelings through her expressive eyes.
b. captivates every one
c. her mischievous look
d. Savitri captured the audience with her charm and magnificent acting.

The correct sequence of the sentences is:

1. b c d a
2. d a c b
3. b c a d
4. d a b c

74. He said, "what have you been doing here for the last ten days".
The correct reported speech for the above direct speech is

1. He asked that what I had been doing there for the last ten days.
2. He asked me what I had been doing there for the last ten days.
3. He asked me if I had been doing there for the last ten days.
4. He told me that I had been doing there for the last ten days.

75. The correct sentence among the four is

1. The tiger felt sharp kick on his side.
2. The tiger terrified and it runs through the dark forest.
3. He asked his wife for some palm-wine.
4. When I catch him, I would give him a good beating.

76. Many Countries are thinking of abolishing <u>capital punishment</u>.
The underlined idiom 'Capital punishment' means

1. Total punishment
2. Punishment in the capital
3. Death sentence
4. Stop giving capital

77. The correct simple sentence for the complex sentence
If you neglect your studies, you will be in deep trouble is

1. Neglect your studies and you will be in deep trouble.
2. Unless you neglect your studies, you will not be in deep trouble.
3. In the event of neglecting your studies, you will be in deep trouble.
4. You must neglect your studies or else you will not be in deep trouble.

78. I have had tea.
The correct question tag for the above statement is

1. had I ?
2. hadn't I
3. haven't I ?
4. have I ?

79. The proper subscription for an editor of a newspaper is

1. Yours sincerely,
2. Yours obediently,
3. Yours lovingly,
4. Yours truly

80. The conjunction which is used in a compound sentence is;

1. if
2. so that
3. that
4. so

81. The correct complex sentence for the simple sentence
'He is too young to learn French.' is

1. He is very young so he cannot learn French.
2. He is so young but he cannot learn French.
3. He is so young that he cannot learn French.
4. He is so young that he could not learn French.

Read the passage given below carefully and choose the correct answers to the questions [82-84] that follow.

The Country now needs a new equilibrium, a new spirit of national reconciliation, that can be brought about only by moving forward to the new frontiers of true equality, fuller opportunities and greater compassion for the weaker sections of its people. Our goal is total freedom for the people that can fully reflect the urges and aspirations for better life. We cannot remain content by merely revealing our past even under conditions of complete freedom without a matching concept of the present and the future.

82. The word used in the sense of 'a state of balance' is

1. spirit
2. reconciliation
3. compassion
4. equilibrium

83. The writer says that the weaker sections

1. should be awakened
2. need better opportunities and more sympathy
3. need true equality
4. need cultural awareness

84. We cannot remain satisfied with the past: we should think of

1. only the past
2. present and future
3. matching present with the past
4. going back to the past

85. At the primary level, learners can use this kind of Dictionary

1. an Advanced Dictionary
2. a Thesaurus
3. a Picture Dictionary
4. an Encyclopedia

86. Some words may be important only for a given piece of text or information. Such words may be classified as;

1. Active Vocabulary
2. Recognition Vocabulary
3. Adhoc Vocabulary
4. Receptive Vocabulary

87. The first method tried to teach English in India was

1. Bilingual method
2. Structural method
3. Grammar translation method
4. Situational method

88. One of the features of language mentioned below is wrong. Identify it.

1. Language is systematic
2. Language is arbitrary
3. Language is not extendable
4. Language transmits culture

89. Rising tone / intonation is not used in:

1. 'wh' questions
2. requests
3. greetings
4. commands

90. Listening to poetry, plays on the radio and stories comes under:

1. Listening to evaluate
2. Listening to communicate
3. Listening for enjoyment
4. Listening to solve problems

## TAMIL - PAPER-III - SET-1

## PART-IV

91. இராமலிங்க அடிகளார் மனுநீதி சோழனின் வரலாற்றை மனுமுறை கண்ட வாசகம் என்று சிறந்த உரைநடை நூலாக எழுதினார். இவர் சிவநேச வெண்பா, மகாதேவமாலை போன்ற பல நூல்களை இயற்றியுள்ளார். - மனுமுறை கண்ட வாசகம் என்பது இவ்வகை நூல்

1. இலக்கணம்
2. சிறுகதை
3. உரைநடை
4. காப்பியம்

92. உள்ளத்து உள்ளது கவிதை - இன்பம்
உருவெடுப்பது கவிதை - இப்பாடலின் ஆசிரியர்

2. பாரதியார்
2. கவிமணி தேசிக விநாயகம்
3. பாரதிதாசன்
4. இளங்கோவடிகள்

93. 'பிரிவிலை ...................... இல்லை' - விடுபட்ட சீர்கள் இவை

1. அங்கும் பேதம்
2. எங்கும் அங்கும்
3. இங்கும் அங்கும்
4. எங்கும் பேதம்

94. டாக்டர். மு.வரதாரசனார் நாவல்களில் சாகித்திய அகாதெமி பரிசு பெற்ற நாவல்

1. மண் குடிசை
2. அகல் விளக்கு
3. கள்ளோ? காவியமோ?
4. அல்லி

95. சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும்

தெய்வ வள்ளுவன் வான்மறை செய்ததும்.

– இவ்வடியில் சேரன் தம்பி என்பது இவரை குறிக்கும்

1. கம்பர்
2. பாரதிதாசன்
3. இளங்கோவடிகள்
4. செங்கூட்டுவன்

96. அணுவைத் துளைத்துஏழ் கடலைப் புகட்டி

குறுகத் தறித்த குறள் – என்று பாடியவர் இவர்

1. கபிலர்
2. ஔவையார்
3. கம்பர்
4. பரணர்

97. குருதியின் நதிவெளி பறக்கவே

குடையினம் நுரையென மிதக்கவே

கரிதுணி படுமுடல் அடுக்கியே

கரையென இருபுடை கிடக்கவே

- இப்பாடலில் கரி என்பதன் பொருள்

1. யானை
2. குதிரை
3. தேர்
4. கரடி

98. இராமலிங்க அடிகளார் தென்னார்காடு மாவட்டத்தில் உள்ள மருதூரில் பிறந்தார். இவருடைய தந்தையார் இராமையாப்பிள்ளை, தாயார் சின்னம்மையார்.

- இராமலிங்க அடிகளாரின் தந்தையார் பெயர்

1. சின்னம்மையார்
2. இராமையாப்பிள்ளை
3. இராமதாசு
4. கிருஷ்ணய்யா

99. பாட்டாளி மக்களது பசிதீர வேண்டும்

பணமென்ற மோகத்தின் விசைதீர வேண்டும்

- எனும் பாடல் வரிகளை பாடியவர் இவர்

1. நாமக்கல் இராமலிங்கனார்
2. சுரதா
3. கவிமணி
4. பாரதிதாசன்

100. “வாழ்க்கையில் இழப்பு என்பதே இல்லை; ஒன்று போனால் இன்னொன்று வரும்; அந்த நம்பிக்கை இருந்திருந்தால் வெறுமையாகாது” - என்று கூறியவர்

1. இலிண்ட்கிரென்
2. கெலன் கெல்லர்
3. அயோதிதாச பண்டிதர்
4. யூசப்சித்திக்

101. கலித்தொகைப் பாடல்கள் இவ்வோசையைப் பயன்படுத்தி நல்லந்துவனார் பாடியுள்ளார்

1. அகவலோசை
2. செப்பலோசை
3. துள்ளலோசை
4. தூங்கலோசை

102. உ.வே.சாமிநாதய்யர் ஊர் ஊராக சென்று செல்லுக்கும் கறையானுக்கும் இரையாகிக்கொண்டிருந்த ஓலைச்சுவடிகளைப் பதிப்பித்தார். - உ.வே.சாமிநாதய்யரை இவ்வாறும் அழைப்பர்

1. சொல்லின் செல்வர்
2. தமிழண்ணல்
3. தமிழ்த் தாத்தா
4. தமிழ்த் தென்றல்

103. ‘கொய்யாக்கனி’ எனும் நூலை இயற்றியவர்

1. மதுரகவி பாஸ்கரதாசு
2. மீரா
3. சாலை இளந்திரையன்
4. பெருஞ்சித்திரனார்

104. ‘பரமார்த்த குரு கதை’ என்னும் நூலை இயற்றியவர்

1. வீரமாமுனிவர்
2. அகிலன்
3. மறைமலையடிகள்
4. கல்கி

105. ‘நெடுந்தொகை’ என அழைக்கப்படும் சங்க இலக்கியம்

1. புறநானூறு
2. அகநானூறு
3. குறுந்தொகை
4. கலித்தொகை

106. சொல்லின் செல்வர் ரா.பி.சேதுப்பிள்ளை திருநெல்வேலி மாவட்டத்தில் 1896ல் பிறந்தார். சென்னைப் பல்கலைக்கழகம் நூற்றாண்டு விழாவின்போது இவருக்கு டாக்டர் பட்டம் வழங்கியது. இவரது பேச்சு எழுதும் தமிழ் போன்று கொச்சை மொழிகள் இன்றியும், தூய தமிழில் அமைந்து இருந்தது.

– சொல்லின் செல்வர் என ரா.பி.சேதுப்பிள்ளை கூறக் காரணம்

1. கொச்சை மொழியில் பேசுவதால்
2. தூய தமிழில் பேசியதால்
3. தூய தமிழில் எழுதுவதால்
4. ஊரும் பேரும் என்னும் நூல் எழுதியதால்

107. நாங்கள் சேற்றில்
கால் வைக்காவிட்டால்
நீங்கள் சோற்றில்
கை வைக்கமுடியாது – எனும் கவிதையை இயற்றியவர்

1. நா.காமராசர்
2. வைரமுத்து
3. கண்ணதாசன்
4. வல்லிக்கண்ணன்

108. உரையிடை யிட்ட பாட்டுடைச் செய்யுள் – என்று அழைக்கப்படும் காப்பியம்

1. கம்பராமாயணம்
2. சிலப்பதிகாரம்
3. சீவக சிந்தாமணி
4. மணிமேகலை

109. மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேணிலும்
– இப்பாடலைப் பாடிய சமயக்குரவர்

1. சுந்தரர்
2. மாணிக்கவாசகர்
3. திருஞானசம்பந்தர்
4. திருநாவுக்கரசர்

110. 'திருச்சந்த விருத்தம்' எனும் நூலை இயற்றியவர்

1. பெரியாழ்வார்
2. பேயாழ்வார்
3. திருமழிசையாழ்வார்
4. பூதத்தாழ்வார்

111. ‘அறநெறிச்சாரம்’ எனும் சமன நூலை இயற்றியவர்

1. முனைப்பாடியார்
2. திருத்தக்கத்தேவர்
3. வீரமாமுனிவர்
4. சாத்தனார்

112. ‘காவியா தர்ஸம்’ என்னும் வடநூல் தமிழில் இந்நூலாக மொழிப்பெயர்க்கப்பட்டது

1. நன்னூல்
2. தண்டியலங்காரம்
3. நேமிநாதம்
4. யாப்பருங்கல விருத்தி

113. பரணி பாடுவதில் வல்லவர் இவர்

1. ஒட்டக்கூத்தர்
2. கம்பர்
3. சயங்கொண்டார்
4. புகழேந்தி

114. தமிழ்நாட்டில் அச்சான முதல் தமிழ் நூல்

1. போர்சுகீஸ் தமிழ்ப் புத்தகம்
2. கிறித்துவ வணக்கம்
3. ஞானக் கண்ணாடி
4. கிறித்துவ வேதோபதேசம்

115. ‘வேருக்கு நீர்’ - எனும் நூலின் எழுத்தாளர்

1. இராஜம் கிருஷ்ணன்

2. விமலா ராணி

3. இராஜம் ராமமூர்த்தி

4. வசுபதி ராமசாமி

116. தமிழ்நாட்டின் ‘வால்டர் ஸ்காட்டு’ என்பவர்

1. வேங்கடரமணி

2. கல்கி

3. டி.டி.சாமி

4. மறைமலையடிகள்

117. ‘சிறுகதை மன்னன்’ என்று அழைக்கப்படுபவர்

1. கு.ப.இராஜகோபாலன்

2. கல்கி

3. புதுமைப்பித்தன்

4. ஜெயகாந்தன்

118. மனோன்மணியம் என்ற நாடக நூலின் ஆசிரியர்

1. பம்மல் சமபந்த முதலியார்

2. சூரிய நாராயண சாஸ்திரியார்

3. சங்கராதாஸ் சுவாமிகள்

4. சுந்தரம்பிள்ளை

119. சிற்பி சிலையைச் செய்தான். - இது இவ்வகைத்தொடர்

1. செயப்பாட்டுத் தொடர்
2. செய்வினைத் தொடர்
3. உணர்ச்சித் தொடர்
4. வினாத்தொடர்

120. தாய் குழந்தைக்கு உணவு உண்பித்தாள் - இது இவ்வகைத்தொடர்

1. வினாத் தொடர்
2. பிறவினைத் தொடர்
3. செயப்பாட்டுத் தொடர்
4. செய்வினைத் தொடர்

121. என்னே! தமிழின் இனிமை! - இது இவ்வகைத் தொடர்

1. உணர்ச்சித் தொடர்
2. செய்வினைத் தொடர்
3. வினாத் தொடர்
4. பிறவினைத் தொடர்

122. கண்ணகி, "பாண்டிய மன்னா, என் கனவன் கள்வன் அல்லன்" என்றாள். - இது இவ்வகைத் தொடர்

1. அயற்கூற்று

2. தன்வினைத் தொடர்

3. பிறவினைத் தொடர்

4. நேர்க்கூற்று

123. வெற்றிலை பாக்கு - என்பது இவ்வகைத் தொகை

1. உம்மைத் தொகை

2. உவமைத் தொகை

3. பண்புத் தொகை

4. வினைத்தொகை

124. வந்த நின்றான். - என்பது இவ்வகைத் தொடர்

1. விளித் தொடர்

2. வினைமுற்றுத் தொடர்

3. வினையெச்சத் தொடர்

4. பெயரெச்சத் தொடர்

125. ஓர் எழுவாய் அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட எழுவாய்கள் ஒரு பயனிலையைக்கொண்டு முடிவது - இவ்வகைத் தொடர்

1. தொடர்நிலைத் தொடர்
2. தனிநிலைத் தொடர்
3. தன்வினைத் தொடர்
4. கலவைத் தொடர்

126. கார்மேகம் கடுமையாக உழைத்தார்; அதனால் வாழ்வில் உயர்ந்தார். - இது இவ்வகைத் தொடர்

1. கட்டளைத் தொடர்
2. கலவைத் தொடர்
3. தனிநிலைத் தொடர்
4. தொடர்நிலைத் தொடர்

127. வயலில் மாடுகள் மேய்ந்தில. - இது இவ்வகைத் தொடர்

1. கலவைத் தொடர்
2. எதிர்மறைத் தொடர்
3. பொருள்மாறா எதிர்மறைத் தொடர்
4. உடன்பாட்டுத் தொடர்

128. வினா பொருளைத் தரும் தொடர்

1. வினாத் தொடர்
2. கட்டளைத் தொடர்
3. உணர்ச்சித் தொடர்
4. தனிநிலைத் தொடர்

129. 'யான்' என்னும் தன்மை ஒருமை ஆறாம் வேற்றுமை உருபை ஏற்கும்போது – இவ்வாறு வரும்

1. எனக்கு
2. என்
3. எனது
4. என்னில்

130. ஓர் அடியின் நான்கு சீர்களிலும் முதலெழுத்து ஒன்றிவர தொடுப்பது – இவ்வகை மோனை

1. இணை மோனை
2. பொழிப்பு மோனை
3. முற்று மோனை
4. மேற்கதுவாய் மோனை

131. வடக்கு என்னும் திசைப் பெயரோடு பிறதிசை பெயர்கள் வந்து சேரும்போது இவ்வாறு வரும்

1. நிலைமொழி ஈறுகெடும்
2. வருமொழி முதல் கெடும்
3. நிலைமொழி ஈறும் மெய்யும் கெடும்
4. வருமொழி முதலும் நிலைமொழி ஈறும் கெடும்

132. ஒரு சொல் தனித்து நின்று பொருளை உணர்த்துவது – இவ்வகை மொழி

1. தனி மொழி
2. தொடர் மொழி
3. பொது மொழி
4. பிரி மொழி

133. நேரிசை ஆசிரியப்பாவில் ஈற்றயலடி – இவ்வாறு வரும்

1. நாற்சீராய்
2. ஈரசையாய்
3. முச்சீராய்
4. ஓரசையாய்

134. இயல்பாக நிகழும் நிகழ்ச்சியில் கவிஞர் தம் குறிப்பினை ஏற்றி கூறுவது

1. வஞ்ச புகழ்ச்சியணி
2. தற்குறிப்பேற்ற அணி
3. இரட்டுறமொழிதல் அணி
4. பிறிதுமொழிதல் அணி

135. இளமுருகு என்பானிடம் நிறைய அறிவுண்டு பொறுமை இல்லை. – இத்தொடரில் இடும் நிறுத்தற் குறியீடு

1. முற்றுப் புள்ளி
2. காற்புள்ளி
3. முக்காற்புள்ளி
4. அரைப் புள்ளி

136. முதல் வேற்றுமைக்கு உருபு – இது

1. இல்லை
2. ஐ
3. ஆல்
4. அது

137. ‘ஆகாயத் தாமரை’ – எனும் மரபுத் தொடருக்கான பொருள்

1. பொய்யமுகை

2. மிகுதியாக பேசுதல்

3. இல்லாத ஒன்று

4. பயனின்றி இருத்தல்

138. ‘சென்றனன்’ – இப்பகுபதத்தின் சாரியை இது

1. சென்று

2. அன்

3. செல்

4. ற்

139. நாடக உறுப்பினர் போல உரையாடல்களையும், பாடும் பாடல்களையும் மாணவர் மனப்பாடம் செய்து நடித்தல் – இத்திறனை வளர்க்கும்

1. நடிப்பு முறையில் மனப்பாட ஆற்றலை வளர்க்கும்

2. நடிப்பு முறையில் எழுத்துத் திறனை வளர்க்கும்

3. நடிப்பு முறையில் சொற்களஞ்சியப் பெருக்கத்தை வளர்க்கும்

4. நடிப்பு முறையில் பேசுதல் திறனை வளர்க்கும்

140. செயல்திட்ட முறையை கற்பித்தலில் நடைமுறைப்படுத்தியவர் – இவர்

1. ரிச்சர்ட்ஸ்
2. கில்பாட்ரிக்
3. டூயி
4. டால்டன்

141. வேலை வீட்டுப்பாடம் அல்லது

1. நாட்குறிப்பு
2. படியெழுதுதல்
3. மனப்பாடம்
4. தொடர்பணி

142. கல்வி ஏற்பாட்டைத் தொடர்ந்தும் சார்ந்தும் அமைவது

1. கல்விக்கொள்கை
2. பாடக்குறிப்பு
3. பாடத் திட்டம்
4. பாடக் கற்பித்தல் திட்டம்

143. மொழிப்பாடத்தை பிற பாடங்களில் இருந்து வேறுபடுத்திகாட்டும் கற்பிப்பு நோக்கங்களில் ஒன்று

1. பாடப்பொருள் அறிவு
2. மொழியழகு உணர்வு
3. மொழித்திறன் வளர்ச்சி
4. பாடப்பொருள் செறிவு

144. செய்யுட்பாடம் பயிற்றலின் நோக்கம்

1. சுவையுணர்திறன்

2. மாணாக்கர்தம் இசையறிவை வளர்த்தல்

3. உலகியல் அறிவை வளர்த்தல்

4. மாணாக்கர்தம் பண்பாட்டை வளர்த்தல்

145. ஆழ்ந்த படிப்பு என்பது

i. நூலில் உள்ள கருத்துக்களை அறிதல்

ii. சொற்றொடர் அறிதல்

iii. நூலின் சிறப்புகள் அறிதல்

iv. நூலின் சொல்லாட்சி அறிதல்

1. i, ii, iii
2. i, ii
3. i, iv
4. i, ii, iii, iv

146. ஆசிரியர் கதை சொல்லும் முறைகளில் ஒன்று

1. ஏற்ற இடங்களில் இயல்பான குரலில் எடுத்தும், படித்தும், நடித்தும், கதைபோக்கு அமைய வேண்டும்

2. சத்தமாக கூறுதல் வேண்டும்

3. புத்தகத்தில் உள்ளதை படித்தல் வேண்டும்

4. சத்தமின்றி படித்தல் வேண்டும்

147. கீழ்வரும் நோக்கங்களுள் இது சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்டு வரையறுக்கப்பட்டதாகும்

1. கூட்டல் கணக்கை தவறில்லாமல் செய்தல்
2. எழுத்தை பிழையின்றி உச்சரித்தல்
3. பொது இடங்களில் பணிவாக நடந்துகொள்ளல்
4. பூவின் பாகங்களை விளக்குதல்

148. ஆசிரியர் மற்றும் மாணவர்க்கு சார்பானது

1. இனக்கமின்மை
2. கீழ்ப்படிதல்
3. அடக்குதல்
4. நடப்பு விதிகள்

149. விரலசைவுப் பழக்கம் இத்திறனை வளர்க்கும்

1. நடித்தல் பழகு செயல்
2. படித்தல் வேகப் பழகு செயல்
3. எழுதுதல் முன் பழகு செயல்
4. கேட்டல் திறன் பழகு செயல்

150. கீழ் வருவனவற்றில் பாடநூல் தயாரிப்பில் தொடர்பு இல்லாதது

1. கல்விக் கொள்கை
2. கல்வி ஏற்பாடு
3. பாடத்திட்டம்
4. பாடம் கற்பித்தல்